மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து அரசு பரிசீலனை செய்யும். இன்னும் அப்படிப்பட்ட ஒரு கமிஷன் அமைக்கப்படவில்லை. குறிப்பாக, ஒவ்வொரு வகுப்பினரும், பிள்ளைமார் போன்ற வகுப்பினர்கள் எல்லாம், தங்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இப்படி ஒவ்வொருவரும் கேட்பதைப் பார்க்கும்போது, எனக்கு வருகிற யோசனை என்னவென்றால், தமிழ்நாட்டிலேயுள்ள மக்கள் அத்தனை பேரையும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்று ஆக்கிவிட்டு, அதிலேயிருந்து முன்னேறியவர்களைப் பிரித்து, அவர்களுக்குத் தனியாக இட ஒதுக்கீடு செய்ய முடியுமா என்பதை யோசித்துக் கொண்டிருக்கிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மதிவாணன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

18—

மீன் பிடிப்புப் பகுதிகளில் மீனவர்கள் மோதல்களைத் தவிர்த்தல்

* **1423 திரு. இரா. மதிவாணன்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக எல்லையை ஒட்டி உள்ள மீன்பிடிப் பகுதிகளுக்குச் செல்லும் மீனவர்கள் வழிதவறி பிற மாநில எல்லைகளுக்குச் செல்லும்போது ஏற்படும் மோதல்களைத் தவிர்க்க அரசு ஏதேனும் திட்டம் வகுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன்வளத் துறை அமைச்சர்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

1996 ஜூலை 25]

(ஆ) சென்னை மற்றும் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்ட மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கும்போது வழி தவறிச் செல்லும்போது அண்டை மாநிலமான ஆந்திரப் பிரதேச மீனவர்களால் பிடித்து வைக்கப்படுவதால் ஏற்படும் மோதலைத் தவிர்க்க இரு மாநிலங்களைச் சேர்ந்த அரசு அலுவலர்க,ள் மீனவர்கள் கொண்ட இரு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஐந்தாண்டுகளாக தமிழ்நாட்டிலே இருந்து ஆந்திரப் பகுதிக்குச் சென்று மீன்பிடிக்கும்போது, அங்கே ஆந்திர மீனவர்கள், அந்தப் படகுகளைப் பிடித்துக் கொண்டு, படகுகளில் இருக்கிற மீன்களையும் மற்ற பொருள்களையும் எடுத்துக் கொண்டு, ஆட்களையும் பிடித்து வைத்துக் கொள்கிறார்கள். இங்கே இருக்கிற அரசு அதிகாரிகளும், அங்கேயுள்ள அரசு அதிகாரிகளும் கலந்து பேசுகிறபோதும், அதே சூழ்நிலைதான். அதாவது, படகுகளில் இருக்கின்ற பொருள்களைக் கொள்ளையடிக்கிறார்கள். ஒவ்வொரு படகுக்கும் தலா ஐயாயிரம், பத்தாயிரம் ரூபாய் என்று அபராதம் கட்டினால்தான் அனுமதிப்போம் என்ற வகையில், அங்கே வசூலித்துக் கொண்டு, அதன் பிறகுதான் படகுகளை விடுவிக்கிறார்கள். ஆகவே, நம்முடைய அரசு, தொடர்ந்து அந்தமாதிரி ஒரு சூழ்நிலை இல்லாமல், நல்ல முறையிலே படகுகளை அங்கிருந்து விடுவிக்க, ஆந்திர அரசுடன் பேசி முடிவினை எடுக்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆவன செய்யும். ஏற்கெனவே இரண்டு மாநிலங்களுக்கிடையே மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் இரண்டு குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுவும் தவிர அப்படி மீனவர்களுக்கு ஏதாவது ஏற்பட்டால் துயர் துடைக்கும் நிதி மேலாண்மை என்ற குழுவும் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ஆர். இராமசாமி.

திரு. கே. ஆர். இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரம் பகுதியில் வெளிநாட்டவர்களால், இன்றைக்கு மீன் பிடிக்கச் செல்கின்ற மீனவர்களுக்கு, அதிகமாக தொந்தரவுகள் ஏற்படுகின்றன. பல தடவை பல உயிர்களை நாம் இழந்திருக்கிறோம். அது தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது. அதைத் தடுப்பதற்கு சரியான நடவடிக்கை எடுக்க அரசு என்ன செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அ. அசோகன்.

திரு. அ. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் பகுதியிலே மீனவர்களுக்கு தற்சமயம் ஒரு குறை இருக்கிறது. அதாவது இரவு, பகல் கடலுக்குள் சென்று வர, 350 லிட்டர் டீசல் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் ஆழ்கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது அந்த 350 லிட்டர் டீசல் போதுமானதாக இல்லை. எனவே டீசல் அளவை உயர்த்தி வழங்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி கேட்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. மதிவாணன்.

திரு. இரா. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 14,15 ஆகிய தேதிகளில் புயலில் சிக்கி, பாதிக்கப்பட்ட 54 மீனவர்களும், 10 விசைப் படகுகளும் சென்னைக்குத் திரும்பாத நிலையில், இன்றைய சூழ்நிலையில், சென்ற மூன்று நாட்களுக்கு முன்பு, பங்களாதேஷில் 3 படகுகள் கரையோரம் ஒதுங்கி அதிலிருந்து 15 பேர்கள் கரைக்குத் திரும்பியிருக்கிறார்கள். அதில் 3 பேர்கள் சென்னைக்கு வந்திருக்கிறார்கள். மீதமுள்ள 12 பேர்கள் டாக்காவில் இருக்கிறார்கள். அவர்களை உடனே கொண்டுவர அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

1996 ஜூலை 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்கு சம்பந்தமே இல்லாமல் கேள்வி கேட்டால், அமைச்சர் அவர்கள் எப்படி பதில் சொல்லுவார்கள்?

மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆவன செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் - விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

3. கவன ஈர்ப்பு

உணவுப்பொருள் பங்கீட்டுக்கு குடும்ப அட்டை வழங்குதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 55-ன்கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராஜேந்தர் அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். அதில் இருப்பதை மட்டும் படியுங்கள்.

TRUTH ALONE TRIUMPHS

திரு. டி. இராஜேந்தர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடும்ப அட்டைகளைப் பெற முறைப்படி மனுச்செய்தும், அவைகள் கிடைக்காததால் மக்கள் அவதிப்படுவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.